சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 12.03.2024 SC.113/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதாப் | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.20**

---

முதல் விசாரணை

நான் கம்பம் மெயின்ரோடு மஞ்சகுளத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.17**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

கடந்த 26.03.2018ம் தேதி மதியம் 13.00 மணிக்கு நானும் கம்பம் மந்தையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த செல்வம் என்பவர் மகன் என்னுடன் வேலை செய்யும் வைரமுத்து என்பவரும் கம்பம் நடராஜ கல்யாண மண்டபம் பின்புற பகுதியில் ஒரு வெலையாக சென்றுவிட்டு நடராஜ் கல்யாண மண்படத்தின் பின்புறம் உள்ள டாஸ்மார்க் கடைக்கு செல்லும் பாதையில் வந்துகொண்டிருந்தபோது அங்கு வந்த கூடலூர் காவல்துறை ஆய்வாளர் அங்கு மறைந்திருந்த கம்பம் ஆங்கூர்பாளையம் ரோடு ஜெயராமன் என்பவர் மகன் மணிவண்ணன் என்பவரை பிடித்து விசாரித்தார்கள். அப்போது நானும் வைரமுத்துவும் என்னவென்று வேடிக்கை பார்ப்பதற்காக வண்டியை நிறுத்திவிட்டு அருகில் சென்று வேடிக்கை பார்த்தோம். அப்போது மணிவண்ணன் தனது பெயர் விலாசம் கூறிவிட்டு நான் 3-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு என்மீது கம்பம் தெற்கு காவல்நிலையத்தில் அடிதடி வழக்கு ஒன்று உள்ளது. அதன்பின் கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக நான் கம்பம் பத்திர ஆபிஸ் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டான்டிற்கு போகும்போது குள்ளப்பகவுண்டன்பட்டியை சேர்ந்த போலிஸ்காரர் சுதாகர் என்பவர் அங்கு வருவார். நான் சுதாகரிடம் கம்பம் தெற்கு காவல்நிலையத்தில் இருக்கும் வழக்கு சம்மந்தமாக விசாரிப்பேன். அதன்மூலம் சுதாகர் எனக்கு பழக்கமானார். அவரும் நானும் சிகரெட் மற்றும் மது குடிக்கும் அளவிற்கு நண்பர்கள் ஆனொம். நான் தற்போது வறுமையின் காரணமாக சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறென். திடீரென ஒருநாள் போலிஸ் சுதாகர் எனக்கு போன்

செய்து என் ஊர்க்காரர் ஒருத்தனை கொலை செய்ய வேண்டும் என்றும் அவன் பல குடும்பத்தை கெடுக்கிறான் என்றும், தேனி மாவட்டத்தை சேர்ந்த யாரையும் சேர்க்காமல் வெளியிலிருந்து ஆளை இறக்கி செய்யனும் அதனால் அவனை ஆக்சிடென்ட் ஆன மாதிரி பைக்கில் வரும்போது செஞ்சுவிடனும் என்றும், அவன் வர நாள் ஆள் பார்த்து சொல்கிறேன். அதற்கு 3 லட்சம் ருபாய் தருகிறேன். இதை தண்ணியப்போட்டு விட்டு யாரிடமாவது உலறிவிடாதே. வேகமாக ஆளை ரெடி பண்ணி சொல்லு. உனது அக்கவுண்டுக்கு பணம் போட்டுவிடுகிறேன் என்று சொல்லி போனை கட் செய்து விட்டார். அதன்பிறகு எங்கிட்ட 10,000 ரூபாய் அட்வான்சாக சுகந்தி கடையில் வேலை செய்யும் கூடலூர்காரர் பாண்டியராஜ் என்பவரிடம் கொடுத்துவிட்டதை நான் கம்பம் நடராஜ் கல்யாண மண்படத்தின் முன்பு வாங்கிக் கொண்டேன். அதன்பின் கடந்த 15 நாட்களுக்கு முன்பு போலிஸ் சுதாகரும் பாண்டியராஜனும் நானும் சாமியை கொலை செய்ய திட்டம் போட்டோம். சாமி தினமும் இரவு கடையை அடைத்துவிட்டு போகும் போது பாண்டியராஜன் போனில் தகவல் சொல்லவும் நாங்கள் சாமி வரும் வழியில் கொலை செய்வதாக திட்டம் போட்டோம். போலிசார் சுதாகரும் கள்ளக்காதல் செய்யும் சுகந்தியையும் பிடித்து விட்டதாக இன்று பேப்பரில் பார்த்து தெரிந்து கொண்டு என்னையும் போலிசார் பிடித்து விடுவார்கள் என்று நான் தலைமறைமாகி விடலாம் என கம்பம் நடராஜ் கல்யாண மண்டபத்திற்கு பின்புறம் போனபோது இன்ஸ்பெக்டர் என்னை பிடித்துக் கொண்டார். நான் சாமி என்பவரை கொலை செய்வதற்காக பாண்டியராஜனிடம் அடவான்சாக வாங்கிய ரூ.10,000-ல் செலவு செய்தது போக மீதமுள்ள ரூ.7300 பணத்தையும் நான் அவரிடம் பேச பயன்படுத்தி IPLA40 செல்போனையும் தங்களிடம் அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் என ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தார். அப்போது என்னையும் என்னுடன் இருந்த வைரமுத்துவையும் ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்தார். அதில் நானும் வைரமுத்துவும் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளோம். ரூ.7300 கைப்பற்றியதில் அத்தாட்சியில் நானும் வைரமுத்துவும் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court rend over to the witnessess in the presence of the accused and admitted by him to be correct.

Asst. Sessions Judge,
Uthamapalayam.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 12.03.2024 SC.113/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்தோஷ் | | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | | வயது | : |
| விலாசம் | : | | | | |

**அ.சா.21**

---

முதல் விசாரணை

நான் கே.ஜி. பட்டி பி.வி.கே.தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை.

**<u>அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்</u>**

கடந்த 25.03.2018ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.15 மணியளவில் எங்கள் வீட்டின் அருகில் நான் நின்று எண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த கூடலூார் இன்ஸ்பெக்டர் பி.வி.கே.தெருவைச் சேர்ந்த சாமி என்பவர் மனைவி சுகந்தி என்பவர் தன்னை எங்கள் ஊர் பங்களாமேட்டுத் தெருவை சேர்ந்த போலிஸ் சுதாகருடன் கூட்டுச்சேர்ந்து அதிக பவர் உள்ள மாத்திரைக் கொடுத்து கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், அவர் சாகாததால் கூலிப்படையை வைத்து கொலை செய்ய முயற்சித்ததாகவும் முன்கூட்டியே தெரிந்து கொண்ட சாமி கூடலூார் தெற்கு காவல்நிலையத்தில் வைத்து கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து சாமியின் வீட்டையும் அதன் சுற்றப்புறங்களையும் பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். அதில் நானும் எங்கள் ஊர் பலசரக்குக்கடை சின்னவெள்ளை மகன் செல்வம் என்பவரும் சாட்சியாக போட சம்மதித்தோம். அந்த பார்வை மகஜரிலும் வரைபடத்திலும் நானும்

செல்வமும் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.